**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண்: C.C 28/2019 (Splitup Case CC 228/2025) | | காவல் நிலையம்: கவரப்பேட்டை | |
| பெயர் : நாகப்பன் | அ.சா.3 | நாள் : 08.04.2026 | |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.3 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் OATH Act 4 வது பிரிவின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகப்பன் | தாலுக்கா | : | கும்மிடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | முனுசாமி | தொழில் | : | -- |
| கிராமம் | : | பஞ்செட்டி | வயது | : | 50 |

**( 2ம் எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 1, 3 மற்றும் 4 க்கு எதிராக CC 228/2025 வழக்கு பிரிக்கப்பட்டு 299 CRPC ன் படி சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)**

**முதல் விசாரணை**

நான் பஞ்செட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் மட்டும் என்னுடையது. **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கைப்பற்றுதல் மகஜரில் எனது கையொப்பம் இல்லை. இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை சுமார் 10 வருடங்களுக்கு முன்பு போட்டு கொடுத்தேன். எப்போது எங்கு வைத்து எதற்காக போட்டேன் என்று ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதவேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரிசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையின்போது கடந்த 03.10.2012ம் தேதி மாலை 5 மணியளவில் தச்சூர் கூட்ரோடு பேருந்து நிறுத்தம் அருகே வைத்து கவரைப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.407/2012 கீழான திருட்டு வழக்கு சம்மந்தமாக எதிரி நரேஷ் என்பவரை போலிசார் கைது செய்து மனோகரன் மற்றும் என் முன்னிலையில் விசாரித்தாகவும் அப்போது எதிரி குற்றத்தை ஒப்பு கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் பிறகு அதே இடத்திலிருந்து

இரவு 7.30 மணியளவில் எதிரி நரேஷ் அடையாளபடுத்தி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துகளான TN 20 Z 6107 என்ற பதிவெண் கொண்ட TVS சுசூகி இருசக்கர வாகனம் மற்றும் சுமார் 100 கிலோ எடையுள்ள பழைய இரும்பு பொருட்களையும் போலிசார் கைப்பற்றியதாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும் மனோகரும் சாட்சி கையொப்பம் செய்தததாகவும் சொல்லிவிட்டு  தற்சமயம் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– நாகப்பன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.04.08 23:19:26 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி